23.03.2023
O.S.No. 50/2018

வா. சா. 3 சுந்தர்பாபு அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்திருப்பவர் பெயர் வெங்கடேசன். அவர் வாதியின் மருமகன். வாதி அழைத்ததன் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 381/1, கணபதி சேர்வை சந்து, மதுரை, மேலூர் என்ற முகவரியில் முன்பு குடியிருந்தேன் என்றால் சரிதான். தற்போது 343/1, மணிமாறன் தெரு, சமயபுரம் கோவில் தெரு, காந்திபுரம், கே.புதூர், மதுரை என்ற விலாசத்தில் வசிக்கிறேன். கணபதி சேர்வை சந்து முகவரியில் தற்போது இருந்து 4 ஆண்டுகளுக்கு முன்பு குடியிருந்தேன். அந்த வீட்டில் 3.3/4 வருடம் குடியிருந்தேன். அதற்கு முன்பாக DRO காலனிக்கு முன்பாக உள்ள தெருவில் குடியிருந்தேன். கதவு எண் நினைவில்லை. யார் வீடு என்பதும் நினைவில்லை. என்னுடைய தொழில் என்ன என்றால் மதுரை சக்கரா லாட்ஜில் புக்கிங் கிளார்க்காக வேலை செய்கிறேன். நான் இப்போது இருந்து 3.1/2 வருடமாக வேலை பார்க்கிறேன். அதற்கு முன்பாக மதுரையில் கூலி வேலை செய்து வந்தேன். எழுத்தர் வேலை இல்லை. அவ்வாறான எழுத்தர் வேலை எப்போதும் பார்த்தது இல்லை. அய்யாச்சாமியை 20 வருடமாக தெரியும். நத்தம் மாரியம்மன் கோவில் தெருவில் 2014 க்கு முன்பாக குடியிருந்தேன். அதனால் அய்யாச்சாமியை பழக்கம். அய்யாச்சாமிக்கு நத்தம் கைலாசநாதன் கோவில் அருகே குடோன் உள்ளது என்றால் சரியல்ல. அவர் குத்தகைக்கு தேங்காய் வெட்டுவது தொழில் ஆகும். அய்யாச்சாமிக்கு சொந்தமான தோப்புக்கள் கிடையாது. அவருக்கு சொந்தமான சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் அய்யாச்சாமி வீட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்திற்கான

விவரங்களை அய்யாச்சாமிதான் சொன்னார். நான் 9ம் வகுப்பு படித்து உள்ளேன். வாதியின் முகவரிக்கும் பிரதிவாதியின் முகவரிக்கும் இடையே 8 கி.மீ. தொலைவு உள்ளது. மணிவண்ணன், செல்லப்பாவை தெரியுமா என்றால் மணிவண்ணனை பல ஆண்டுகளாக பழக்கம். செல்லப்பாவை அன்றுதான் பார்த்தேன். 381/1 விலாசத்திற்கு வந்த சம்மன் சார்பு செய்யப்படாமல் திரும்ப வந்தது என்றும் அதன் பின்னர் அய்யாச்சாமி மதுரைக்கு என்னை தேடிவந்து அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். அய்யாச்சாமி யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் அவரை பணம் வாங்கும்போது பார்த்தேன். அவர் சம்பைபட்டியை சேர்ந்தவர். அதற்கு முன்பாகவோ பின்பாகவோ அவரை பார்த்தது இல்லை என்றால் சரிதான். அவருக்கும் அய்யாச்சாமிக்கும் என்ன பழக்கம் வழக்கம் உள்ளது என்று நேரடியாக தெரியாது. அவர்களுக்குள் தேங்காய் வெட்டுவதில் பழக்கம். அய்யாச்சாமி வீட்டுக்கு என்னை வரச்சொல்லி முதல் நாள் சொன்னார். கிழமை தெரியாது. 26.08.2015ம் தேதி அய்யாச்சாமி என்னை வரச்சொன்னார். இரவு 8 மணியளவில் சொன்னார். மறுநாள் காலை 11 மணியளவில் அய்யாச்சாமி வீட்டுக்குச் சென்றேன். அங்கு அய்யாச்சாமி, செல்லையா, மண்வண்ணன், பணம் வாங்கும் நபர் ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்கள் யார் சொல்லி வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பணம் வாங்கியவர் எவ்வளவு கேட்டார், எவ்வளவு கொடுத்தார் என்றால் ரூ.10 லட்சம் கொடுப்பதாக சொன்னார். அவர் ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டதை பார்த்தேன். அய்யாச்சாமி பணத்தை வீட்டிலேயே வைத்திருந்தார். பீரோவில் வைத்திருந்தாரா என்றால் பக்கத்திலேயே வைத்திருந்தார். பேச்சுவார்த்தை சுமார் ½ மணி நேரம் ஆனது. அதன் பின்னர் பணத்தை கொடுத்தார். ரூ.10 லட்சம் தொகை என்ன வகை நோட்டுக்கள் ரூ.500. 1000 ரூபாய் நோட்டுக்கள் ஆகும். ரூ.500 ரூபாய் எத்தனை கட்டு ரூ.1000ம் ரூபாய் எத்தனை கட்டு என தெரியாது. என்ன பேசிக்கொண்டார்கள் என்று தெரியுமா என்றால்

குடும்பச்செலவுக்கும், கடன் பிரச்சனைக்காகவும் சொல்லி பணம் கேட்டார். ஒழுங்காக பணத்தை கொடுக்கவேண்டும் என்று சொல்லி பேச்சுவார்த்தை முடித்து அதன் பிறகு ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆவணத்தில் பேச்சுவார்த்தையில் என்ன தேவைக்காக பணம் வழங்கப்படுகிறது என்ற விவரம் சொல்லி எழுதப்பட்டதா என்றால் அவ்வாறு எழுதப்படவில்லை. என்ன என்ன சங்கதிகள் எழுதப்படவேண்டும் என்று கூறியது அய்யாச்சாமிதான் என்றால் சரிதான். அய்யாச்சாமிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பையன், ஒரு பெண் உள்ளார்கள். அதில் ஒரு பையன் பெயர் சக்தி என்று தெரியும். சக்தி அவரது தகப்பனாருடன் தேங்காய் வியாபாரம் செய்து உடன் இருந்தார் என்றால் தெரியாது. ஆவணம் எழுதிய உடனேயே எல்லோரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். அதன் பிறகுதான் பணம் கொடுக்கப்பட்டது. பிராமிசரி முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதை ஏன் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்று காரணம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அய்யாச்சாமி எனக்கு சொந்தம் இல்லை. உறவினர் இல்லை. நண்பர் ஆவார். இந்த வழக்கில் அய்யாச்சாமி யார் மீது வழக்கு தாக்கல் செய்தாரோ அவர் என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியும். அதன் பிறகும் கூட அய்யாச்சாமி வாதசாஆ.1 ல் உள்ளது பிரதிவாதியின் கையெழுத்துதான் என்று நிரூபிப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாதசாஆ.1 அய்யாச்சாமியின் வீட்டில் வைத்துதான் தயார் செய்யப்பட்டது. அங்கு வைத்துத்தான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் தவறு. நிரூபண வாக்குமூலம் வக்கீல் அய்யா வீட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. வக்கீலுக்கு நானும் அய்யாச்சாமியும் தான் விவரம் சொன்னோம். ஆனால் அது எந்த தேதி என நினைவில்லை. நீதிமன்றத்தில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு 3 மாதங்களுக்கு முன்பு

வக்கீல் அலுவலகத்தில் வைத்து நானும் அய்யாச்சாமியும் விவரம் சொன்னோம். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது 13.3.2023 என்றால் சரிதான். வாதசாஆ.1 ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் சொல்லும் இடத்தில் சொன்ன விதத்தில் வாதசாஆ.1 தயாரிக்கப்படவில்லை என்றும், அதில் போடப்பட்டுள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றாலும் சொன்னால் சரியல்ல. என்னை இன்று நீதிமன்றத்திற்கு அழைத்துவந்த வெங்கடேசன் எனக்கு 6,7 வருடமாக பழக்கமானவர். அய்யாச்சாமி, மணிவண்ணன், செல்லப்பா மற்றும் நானும் சேர்ந்து பிரதிவாதியை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு வாதசாஆ.1 ஐ தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன மாதிரி வாதி எந்த தொகையும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றும், பிரதிவாதியும் எந்த தொகையும் வாங்கவில்லை என்றும் பிரதிவாதிக்கு வழக்கில் கண்ட தொகையை கொடுக்கும் அளவுக்கு வாதிக்கு தகுதி இல்லை என்றும், வழக்கில் கண்ட தொகையை பெறும் அளவுக்கு பிரதிவாதிக்கு தேவையோ அவசியமோ ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் வாதி குடும்பத்தாருடைய நெருங்கிய நண்பர் என்பதால் அவருடைய வழக்குக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியுடன் அவர் மகன் சக்தியும் தேங்காய் வியாபாரம் செய்கிறார் என்றும் அதை தற்போது வழக்கிற்காக இல்லை என்று மறைக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் எனது பழைய முகவரியும் தற்போதைய முகவரியும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு ஏதாவது காரணம் உள்ளதா என்றால் இல்லை.

மறு விசாரணை

S SIVAKADATCHAM

Digitally signed by S SIVAKADATCHAM
Date: 2023.03.23 18:07:11 +0530

Principal District Judge,
Dindigul.